## திருவேற்காடு நகராட்சி

## நகர்மன்ற சாதாரணக் கூட்டம்

திருவேற்காடு நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்டம் நகர்மன்றத் தலைவர் திரு E. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில் வருகின்ற 02.06.2022 அன்று வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும். அவ்வமயம் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்கப்படவுள்ளது. இக்கூட்டத்தில் துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நகர்மன்றத் தலைவர்,
திருவேற்காடு நகராட்சி.

### பொருள் எண்.1

இந்நகராட்சியின் ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் மே 2022 மாதத்திற்கான மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.61** **நாள்.02.06.2022**

**தீர்மானம் : பதிவு செய்யப்படுகிறது.**

---

**பொருள் எண்.2**

இந்நகராட்சியில் பல்வேறு இனங்களின் மே 2022 மாதத்திற்கான செலவுச்சீட்டுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.62** **நாள்.02.06.2022**

**தீர்மானம் : பதிவு செய்யப்படுகிறது.**

---

**பொருள் எண்.3**

இந்நகராட்சியில் பல்வேறு இனங்களின் மே 2022 மாதத்தில் பதிவு செய்துள்ள பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்த குழந்தைகளின் விவரம் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.63** **நாள்.02.06.2022**

**தீர்மானம் : பதிவு செய்யப்படுகிறது.**

---

**பொருள் எண்.4**

திருவேற்காடு நகராட்சி பொது சுகாதார பிரிவில் 7 நுண் உர செயலாக்க மையங்கள் மற்றும் பொது சுகாதார பணிகளுக்கு தேவையான **அன்னகூடை, மலார், இரும்பு மலார், வெட்டுகத்தி, தென்னந்துடைப்பம், மண்தள்ளும் பிரஷ், குப்பை தகடு, கால்வாய் தகடு, மண்வெட்டி, கடப்பாறை, பிக்காஸ்** ஆகிய தளவாட பொருட்களை சப்ளை செய்திட துப்புரவு ஆய்வாளர் அவர்களின் 27.04.2022 தேதிய குறிப்பின் பரிந்துரையினை ஏற்று ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரிட காலதாமதம் ஆகும் என்பதால் உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும் இதற்கான தோராய செலவினம் **ரூ.9.00/–இலட்சத்திற்கு** பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.64** **நாள்.02.06.2022**

**தீர்மானம் :அனுமதிக்கப்படுகிறது.**

---

**பொருள் எண்.5**

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. பொது மக்கள் திடக்கழிவுகள், மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தங்கள் வீட்டின் அருகில் உள்ள காலிமனைகளிலும், சாலையோரங்களிலும் வீசிவிட்டு சென்றுவிடுகின்றனர். சாலையோரங்களில் தேங்கி கிடக்கும் குப்பைகள் மூலம் நோய்கள் பரவும் வாய்ப்புகள் உள்ளதால், சுவை JCB கொண்டு அவைகளை அப்புறப்படுத்திட வேண்டும். நகராட்சியில் உள்ள JCB வாகனம் பழுதடைந்துள்ளதால், பொது சுகாதார பணியில் தொய்வு ஏற்பட்டு பணிகளில் சுணக்கம் அடைந்துள்ளது. எனவே, JCB வாகனங்களை தினசரி வாடகை அடிப்படையில் பணிக்கு அமர்த்திக் கொண்டு பணி செய்யப்பட்டு வருகிறது. தற்போது பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் திடக்கழிவுகள் அதிக அளவில் தேங்கி உள்ளது. மேலும் மக்காத கழிவுகள் கோலடியில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது அவற்றை அப்புறப்படுத்த கூடுதலாக JCB தேவைப்படுகிறது. எனவே கூடுதலாக **JCB** வாகனத்தினை மார்ச் முதல் ஜூலை வரை விலைப்புள்ளி அடிப்படையில் சப்ளை செய்ய துப்புரவு ஆய்வாளரால் 02.03.2022 தேதிய குறிப்பில் பரிந்துரையினை ஏற்று, பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் மற்றும் வெளியூர், தனியார் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள இதற்கான தோராய செலவினம் **ரூ.9.90/–இலட்சத்திற்கு** பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.65** **நாள்.02.06.2022**

**தீர்மானம் :அனுமதிக்கப்படுகிறது.**

---

**பொருள் எண்.6**

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் வீடுதோறும் விடுதலின்றி மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து சேகரம் செய்யப்படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் மக்காத மற்றும் மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகள் தேக்கமடைந்து பொது மக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில், நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு, பாதுகாப்பாக

கையாள போரா பிளாஸ்டிக் கோணிப்பைகளில் அடைத்து பாதுகாப்பாக எடுத்துச்செல்ல **கோணிப்பைகள்** இருப்பு இல்லததால் பணியின் அவசர அவசியம் கருதி குப்பைகளை பாதுகாப்பான முறையில் சேகரம் செய்ய கோணிப்பைகள் தேவைப்படுவதால் துப்புரவு ஆய்வாளரால் **16.04.2022** குறிப்பில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து துப்புரவு ஆய்வாளரின் பரிந்துரையினை ஏற்று பணியி ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து உள்ளூர் மற்றும் வெளியூர் தனியார் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரிடவும் அதற்கான தோராய செலவினம் **ரூ.9.00/– இலட்சத்திற்கு** வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.66** **நாள்.02.06.2022**

**தீர்மானம் :அனுமதிக்கப்படுகிறது.**

---

**பொருள் எண்.7**

இந்நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார பிரிவில், பொது சுகாதார பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் **Tata Ace** வாகனங்களுக்கு வருடாந்திர காப்பீட்டுக் கட்டணம் 2022–2023 ஆண்டுக்கு செலுத்த வேண்டியுள்ளதால் ஒரு வருட காலத்திற்கு காப்பீடு தொகை **53,166/–** கீழ்க்குறிப்பிட்டுள்ள வாகனங்களுக்கு ஆயுள் காப்பீடு கட்டணம் **The New India Assurance Company Limited** நிறுவனத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**வாகனங்களின் விவரம்:–**

| S.No | Vehicle No | Gross Premium |
|---|---|---|
| 1. | **TN -12 AF-1986 (**Tata Ace **)** | 26,583 |
| 2. | **TN -12 AF-1969 (**Tata Ace **)** | 26,583 |
| **Total** | | 53,166 |

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.67** **நாள்.02.06.2022**

**தீர்மானம் :அனுமதிக்கப்படுகிறது.**

---

**பொருள் எண்.8**

திருவேற்காடு நகராட்சி, சென்னை பெரு மாநகராட்சியினை ஒட்டி அமைந்துள்ள நகராட்சியாகும். இங்கு ஏறத்தாழ சுமார் 1 இலட்சத்திற்கு அதிகமாக மக்கள் தொகை கொண்ட நகராட்சியாகும். தற்போது நகராட்சி பகுதிகளில் கொரோனா, டெங்கு மற்றும் பிளாஸ்டிக் பயன்பாடு அதிகரித்துள்ளதால் இது தொடர்பான விழிப்புணர்வு வாசகங்கள், படங்கள் வரைந்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தின் சுற்று சுவர் ஏறத்தாழ 60 மீட்டர் நீளம் 3 மீட்டர் உயரம் அளவு கொண்டதாகும். இந்த சுற்றுசுவரில் குறைந்த பட்சம் விழிப்புணர்வு படங்கள் நேர்த்தியான முறையில் 22 படங்கள் வரைந்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையாக துப்புரவு ஆய்வாளரால் 27.05.2022 குறிப்பில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து துப்புரவு ஆய்வாளரின் பரிந்துரையினை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்க்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து உள்ளூர் மற்றும் வெளியூர் தனியார் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரிடவும் அதற்கான தோராய செலவினம் **ரூ.5.00/– இலட்சத்திற்கு** வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.68** **நாள்.02.06.2022**

**தீர்மானம் :அனுமதிக்கப்படுகிறது.**

---

**பொருள் எண்.9**

திருவேற்காடு நகராட்சி, சென்னை பெரு மாநகராட்சியினை ஒட்டி அமைந்துள்ள நகராட்சியாகும். இங்கு ஏறத்தாழ சுமார் 1 இலட்சத்திற்கு அதிகமாக மக்கள் தொகை கொண்ட நகராட்சியாகும். இந்நகராட்சியில் தினசரி ஏற்க்குறைய 24 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் உற்பத்தியாகின்றன. உற்பத்தியாகும் திடக்கழிவுகள் நகராட்சியின் Tricycle, battery வாகனங்கள் மற்றும் LCV இரக வாகனங்கள் மூலம் சேகரிக்கப்படுகிறது. Tricycle–க்கள் இந்நகராட்சியில் மொத்தம் 44 உள்ளன. இவற்றில் அடிக்கடி ஏற்படும் பழுதுகளை சரி செய்திட வேண்டியுள்ளது. தற்சமயம் நகராட்சியில் இயங்கும் 12 எண்ணிக்கையிலான Tricycle–கள் பழுதடைந்துள்ளன. இவற்றினை துப்புரவு பணியின் அவசியம் அவசர கருதி உடனடியாக பழுதுகளை நீக்கி, உதிரிபாகங்கள் மாற்றி சரி செய்திட துப்புரவு ஆய்வாளரால் 27.05.2022 குறிப்பில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து துப்புரவு ஆய்வாளரின் பரிந்துரையினை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து உள்ளூர் மற்றும் வெளியூர் தனியார் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரிடவும் அதற்கான தோராய செலவினம் **ரூ.1.00/– இலட்சத்திற்கு** வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.69** **நாள்.02.06.2022**

**தீர்மானம் :அனுமதிக்கப்படுகிறது.**

---

**பொருள் எண்.10**

திருவேற்காடு நகராட்சி ஏறத்தாழ 1 இலட்சம் மக்கள் தொகை கொண்ட, சென்னை மாநகரினை ஒட்டி அமைந்துள்ள வளரும் தேர்வுநிலை நகராட்சியாகும். இங்கு மொத்த 18 வார்டுகள் உள்ளன. இந்நகரின் முக்கிய சாலைகளாக சிவன் கோயில் முதல் பருத்திப்பட்டு வரையிலான சாலை வரை, சிவன் கோயில் முதல் வேலப்பன்சாவடி வரை, கோலடி சாலை, அயனம்பாக்கம் சாலை, மாதிரவேடு சாலை, தேரோடும் வீதி என்று சில முக்கியமான சாலைகள் உள்ளன.மேற்படி சாலையில் இருபுறமும் மண் குவிந்துள்ளது. இதனால் வாகன ஒட்டிகள் மிகவும் சிரமப்படுகின்றனர். மேலும் இத்தகைய மண், சாலைகளின் சேகரம் தேங்கி உள்ளதால், அதன் அருகில் திடக்கழிவுகளினை பாதசாரிகள் போட்டு செல்வதால், காண்பதற்கு மிக அசுத்தமாக உள்ளது. எனவே மேற்குறிப்பிட்ட முக்கிய சாலைகளில் ஓரங்களில் உள்ள மணலை, பிரஷ் கொண்டு சுத்தம் செய்யவும், அவ்வாறு சுத்தம் செய்வதன் மூலம் சேகரமாகும் மண் குவியலை உடனடியாக வாகனம் கொண்டு அகற்றி பள்ளமாக உள்ள இடங்களில் சேர்ப்பிக்க வேண்டும். இப்பணியினை நகராட்சியின் தூய்மைப் பணியாளர்கள் கொண்டு செய்வதன் மூலம் திடக்கழிவு மேலாண் பணிகள் பாதிக்க வாய்ப்பு உள்ளது. எனவே தற்போதுள்ள சூழல் கருதி மேற்குறிப்பிட்ட **சாலை ஓரங்களில் உள்ள மணலை பிரஷ்கொண்டு சுத்தம் செய்ய மற்றும் அவற்றினை அகற்றிடவும்** தேவையான பணிகளைச் செய்திட துப்புரவு ஆய்வாளரால் 18.04.2022 குறிப்பில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து துப்புரவு ஆய்வாளரின் பரிந்துரையினை ஏற்று பணியின் அவசர அவசியம்

கருதி விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து உள்ளூர் மற்றும் வெளியூர் தனியார் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரிடவும் அதற்கான தோராய செலவினம் **ரூ.9.90/– இலட்சத்திற்கு** வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.70 நாள்.02.06.2022**

**தீர்மானம் :அனுமதிக்கப்படுகிறது.**

---

**பொருள் எண்.11**

திருவேற்காடு நகராட்சி, பொது சுகாதார பிரிவு, துப்புரவு பணிகளை மேற்க்கொள்கிறது. இந்நகராட்சியில் 18 வார்டுகள் உள்ளன. தினசரி இந்நகராட்சியில் 25 மெட்ரிக் டன் முதல் 27 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் சேகரம் ஆகிறது. இதில் மக்கும் கழிவுகள் 7 முதல் 9 வரையிலான மெட்ரிக் டன் நுண் உர செயலாக்க மையங்களுக்கு அனுப்பப்பட்டு வரப்படுகிறது. இது தவிர தாவர கழிவுகள் 1 முதல் 1.5 மெட்ரிக் டன் அளவிற்கு. சுமார் 1.5 முதல் 2 மெட்ரிக் டன் வரையிலான உலர்கழிவுகள் தரம்பிரிக்கப்பட்டு, சில நிறுவனங்களில் விற்பனைக்காக பெற்றுக்கொள்கிறார்கள். விற்பனை செய்ய இயலாத உலர்கழிவுகள் கோலடி திடக்கழிவு வளாகத்தில் சேகரம் செய்யப்படுகிறது. இவை அனைத்தையும் மக்கும் குப்பை, மக்காத குப்பை என்று பிரித்தெடுக்க இயலாது. மேற்குறிப்பிட்ட வகை திடக்கழிவுகள் அனைத்தும் கோலடி திடக்கழிவு வளாகத்தில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளன. இத்தகைய Mixed கழிவுகள், எவ்வகையிலும் உபயோகப்படுத்த இயலாது. இத்தகைய Mixed கழிவுகள் குறைந்தபட்சம் 100 லாரிகளில் ஏற்றக்கூடிய அளவிற்கு மேலான திடக்கழிவுகளாக கோலடி திடக்கழிவு வளாகத்தில் சேர்ப்பிக்கப்பட்டு உள்ளது. இக்கழிவுகளை மறுசுழற்சி செய்யும் மையத்திற்கு எடுத்துச் செல்ல இயலாது. தனியாரிடம் அனுமதி பெற்று அவர்களின் சொந்தமான மற்றும் பள்ளமான இடங்களில் நிரப்பிக்கொள்ளலாம். மேற்படி பணியினை மேற்கொள்ள செய்திட துப்புரவு ஆய்வாளரால் 18.04.2022 குறிப்பில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து துப்புரவு ஆய்வாளரின் பரிந்துரையினை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து உள்ளூர் மற்றும் வெளியூர் தனியார் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரிடவும் அதற்கான தோராய செலவினம் **ரூ.9.90/– இலட்சத்திற்கு** வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.71 நாள்.02.06.2022**

**தீர்மானம் :அனுமதிக்கப்படுகிறது.**

---

**பொருள் எண்.12**

திருவேற்காடு நகராட்சியில் ஏறத்தாழ 1 இலட்சம் மக்கள் வசிக்கின்றனர். இங்கு 18 வார்டுகளை அமைந்துள்ளன. இந்நகரில் ஏறத்தாழ 1000-க்கு மேற்பட்ட சிறு மற்றும் நடுத்தர கடைகள், ஹோட்டல்கள், வணிக நிறுவனங்கள் அமைந்துள்ளன. 300-க்கும் மேற்பட்ட சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்கள் அமைந்துள்ளன.தமிழக அரசு தற்போது அறிவித்துள்ள ஒருமுறை பயன்படுத்தக் கூடிய **பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை** என்பதை வலியுறுத்தி, கொரோனா காலகட்டத்திற்கு பிறகு கூடுதல்

கவனம் செலுத்திட கேட்டுக்கொண்டுள்ளதை அடுத்து, மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். ஒருமுறை பயன்படுத்தக் கூடிய பிளாஸ்டிக் பொருட்களை தவிர்த்து, மாற்றுப் பொருட்களை பயன்படுத்துவதின் அவசியத்தினை பொது மக்களுக்கு **விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடத்திட** வேண்டும். எனவே, நகரில் பேரணி, பள்ளி மாணவர்களுக்கு போட்டிகள், தெருவோர கலை நிகழ்ச்சிகள், மஞ்ச பையின் மகத்துவத்தை உணரச் செய்யும் நிகழ்ச்சி, பேனர்கள் வைப்பது, கண்காட்சி நடத்துவது போன்ற நிகழ்ச்சிகளை நடத்த உத்தேசிக்கப்பட்டு உள்ளது. மேற்படி நிகழ்வுகளை நடத்திட துப்புரவு ஆய்வாளரால் **16.04.2022** குறிப்பில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து துப்புரவு ஆய்வாளரின் பரிந்துரையினை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து உள்ளூர் மற்றும் வெளியூர் தனியார் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரிடவும் அதற்கான தோராய செலவினம் **ரூ. 8.00/– இலட்சத்திற்கு** வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.72** **நாள்.02.06.2022**

**தீர்மானம் :அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.13

திருவேற்காடு நகராட்சி மொத்த **18** வார்டுகளோடு **939** தெருக்களினை கொண்டுள்ளது. ஏறத்தாழ **30,000** வீடுகளும் ஒரு லட்ச மக்கள் தொகையினையும் கொண்டுள்ள நகராட்சியாகும்.வளர்ந்து வரும் நகராட்சிகளில் ஒன்றான திருவேற்காடு நகராட்சியில் **30,000** வீடுகள் குறையாமல் இருந்தாலும் நிறைய காலிமனைகளும், வெற்றிடங்களும் சற்று மிகையாகவே உள்ளது. நகராட்சிகளில் சேகரம் ஆன தாவரக் கழிவுகள், வாகனங்கள் மூலம் சென்னை மாநகராட்சி பெருங்குடிக்கு அனுப்பப்பட்டு, அங்கு எரிபொருளுக்கான மூலப்பொருளாக மாற்றம் செய்யப்பட்டு வந்தது. பின்னர் சென்னை மாநகராட்சியால், நகராட்சிகளுக்கு, தாவரக்கழிவுகளை ஒப்படைக்க கொடுக்கப்பட்ட அனுமதி விலக்கி கொள்ளப்பட்டது. அதன் பிறகு, தற்போது வரையிலான காலகட்டம் வரை, திருவேற்காடு நகரில் உருவாகும் தாவரக்கழிவுகளினை அப்புறப்படுத்த இயலவில்லை. இதனால் தற்போது நகராட்சி முழுவதும் உள்ள தாவரக்கழிவுகள், சாலை ஓரங்களில், தெருவோரங்களிலும் தேங்கி உள்ளன. இது மட்டுமல்லாமல், தேங்காய் ஓடுகளும், வெட்டப்பட்ட இளநீர் குடுவைகளும் ஆங்காங்கே தேங்கியுள்ளது. குறைந்தபட்சம் **100** மெட்ரிக் டன் முதல் **150** மெட்ரிக் டன் தாவரக் கழிவுகள் தேங்கியுள்ளது. அவற்றினை எவ்விதம் அகற்றுவது என்ற வழிமுறைகள் நகராட்சி நிர்வாகத்தில் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் இல்லை எனினும் இவ்வகை கழிவுகள் தொடர்ந்து அகற்றப்பட்டுக்கொண்டே இருக்க வேண்டும்.

எனவே தாவரக்கழிவுகளை எவ்விதம் கையாளுவது, அகற்றுவது என்பது குறித்தான கருத்துரு பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | நகராட்சியின் பரப்பளவு | : | 28.50 ச.கி.மீ |
| 2. | நகராட்சியில் உருவாகும் திடக்கழிவுகளின் தோராயமான எடை | : | 23 MT முதல் 26 MT வரை |
| 3. | நகரில் உள்ள வார்களின் எண்ணிக்கை | : | 18 |
| 4. | தெருக்களின் எண்ணிக்கை | : | 939 |
| 5. | வீடுகளின் எண்ணிக்கை | : | 25000 (தோராயமாக) |
| 6. | தினசரி உருவாகும் தாவரக்கழிவுகளின் எடை | : | வார்டு வாரியாக |

| **வ. எண்** | **வார்டுகள்** | **உருவாகும் தாவரக்கழிவுகள் (தினசரி) எடை (சராசரி)** |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | 1 | 250 Kg |
| 2 | 2 | 200 Kg |
| 3 | 3 | 200 Kg |
| 4 | 4 | 300 Kg |
| 5 | 5 | 300 Kg |
| 6 | 6 | 200 Kg |
| 7 | 7 | 500 Kg |
| 8 | 8 | 500 Kg |
| 9 | 9 | 150 Kg |
| 10 | 10 | 150 Kg |
| 11 | 11 | 150 Kg |
| 12 | 12 | 300 Kg |
| 13 | 13 | 400 Kg |
| 14 | 14 | 300 Kg |
| 15 | 15 | 500 Kg |
| 16 | 16 | 200 Kg |
| 17 | 17 | 300 Kg |
| 18 | 18 | 200 Kg |
| **மொத்தம் (சராசரி)** | | **5000 Kg** |

தாவரக்கழிவுகளை சேர்ப்பிக்கவோ, சேமித்து வைக்கவோ, கையாளவோ, இடவசதி நம் நகராட்சியில் இல்லை.

எனவே தாவரக்கழிவுகளை எடுத்து சென்று அப்புறப்படுத்தும் பொறுப்பினை தனியார் வசம் ஒப்படைக்க வேண்டும். தாவரக்கழிவுகளை, நகராட்சி பணியாளர்கள் கொண்டு அப்புறப்படுத்த விதிமுறைகளில் குறிப்பிட்டப்படவில்லை. இடவசதி இல்லாத காரணத்தினால் மாற்று ஏற்பாடு செய்திட வேண்டும்.

ஒரு மெட்ரிக் டன் தாவரக்கழிவுகளுக்கு, ஏற்கனவே சென்னை மாநகராட்சியில் கொடுத்த 600 ரூபாய் என்ற அளவிடு தற்போதைக்கு பொருந்தாது ஏனென்றால் தற்போது வாகன எரிபொருள் விலை அதிகமாகி விட்டபடியால் அதற்கேற்ப விலை நிர்ணயம் செய்திடுதல் வேண்டும்.

இப்பணியில் ஈடுபடுத்தப்படும் வாகனத்திற்கு சென்றவருடத்திற்கு ரூ.5000 என்று நிர்ணயம் செய்யப்பட்டது. தற்போதைய நிலவரம் மற்றும் சென்று கொட்டக்கூடிய இடம் குறித்து விலை நிர்ணயம் செய்து கொள்ளலாம்.

தினசரி சேகரம் செய்யப்படும் மற்றும் கொட்டப்படும் தாவரக்கழிவுகளில் எடை குறித்து அறிய தினசரி எடைசீட்டு பெறப்பட வேண்டும்.

தேவைக்கேற்ப 1 வாகனம் முதல் 2 வாகனம் வரை இப்பணிக்கு பயன்படுத்திக்கொள்ளலாம்.

தாவரக்கழிவுகளை சேர்ப்பிக்கும் இடம் அதன் வாடகை குறித்து, தனியார் ஒப்பந்ததாரிடம் விளக்கம் பெறப்பட்டு, அதற்கான தினசரி செலவீனத்தையும், தனியார் ஒப்பந்ததாரர் தனது விலைப்புள்ளியிலோ அல்லது ஒப்பந்தபுள்ளியிலோ குறிப்பிட்டுக்கொள்ளலாம்.

தாவரக்கழிவுகளை சேர்ப்பிக்கும் இடத்தில் உள்ள பிரச்சனைகளை, பணியினை ஒப்பந்ததாரர் தனது சொந்த பொறுப்பில் கவனித்துக்கொள்ள வேண்டும்.

தினசரி தாவரக்கழிவுகளை அகற்றுவது, வாகனங்களில் ஏற்றுவது, தொடர்புடைய இடத்தில் சேர்ப்பிக்க போன்ற பணிகள் புகைப்படம் எடுக்.கப்பட்டு, Bill-உடன் இணைக்கப்படுதல் வேண்டும்

எக்காரணம் முன்னிட்டும், தாவரக்கழிவுகளை எரித்தல் கூடாது.

தாவரக்கழிவுகளை அகற்றும் பணி, வாகனங்களில் ஏற்றும் பணி, கொட்டி வரும் பணி முழுமையாக, ஒப்பந்ததாரரே சேரும்.

மேற்குறிப்பிட்ட பணி செய்திட துப்புரவு ஆய்வாளரால் 18.04.2022 குறிப்பில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து துப்புரவு ஆய்வாளரின் பரிந்துரையினை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து உள்ளூர் மற்றும் வெளியூர் தனியார் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரிடவும் அதற்கான தோராய செலவினம் **ரூ. 9.90 /– இலட்சத்திற்கு** வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.73** **நாள்.02.06.2022**

**தீர்மானம் :அனுமதிக்கப்படுகிறது.**

---

**பொருள் எண்.14**

திருவேற்காடு நகராட்சி மொத்த 18 வார்டுகளோடு 939 தெருக்களினை கொண்டுள்ளது. ஏறத்தாழ 30,000 வீடுகளும் 1 லட்ச மக்கள் தொகையினை கொண்டுள்ள நகராட்சியாகும். பொது சுகாதார பிரிவில் முதன்மை பணியான முறையில் துப்புரவு பணியினை மேற்கொள்ள தற்காலிக பணியிாளர்கள் வெளிக்கொணர்வு முறையில் தருவிக்கப்பட்டுள்ளனர். கொரோனா நோய் பரவ வாய்ப்பு உள்ள சூழ்நிலையில் பணிபுரிய பணியாளர்கள் கிடைப்பதில் பல்வேறு பிரச்சனைகள் இருந்தாலும் மேற்படி தூய்மை பணியாளர்கள் பணிக்கு வந்து கொண்டு உள்ளனர். கொரோனா மற்றும் டெங்கு தடுப்பு பணிக்காக DBC பணியாளர்கள் Fever Survey–க்கென்று தனியாக பணியாளர்கள், திடக்கழிவுகளை கையாளும் தூய்மை பணியாளர்கள், கொரோனா கிருமிநாசினி தெளிப்பவர்கள் என்று பலவகையான பணியாளர்கள் வெவ்வேறு ஒப்பந்தாரர்கள் மூலம் தருவிக்கப்பட்டுள்ளனர். எனவே அனைத்து துப்புரவு பணியாளர்கள், DBC பணியாளர்கள், கொரோனா தடுப்பு பணியாளர்கள் என அனைவருக்கும் ஒரே மாதிரியான **சீருடை Reflector Jocket** வாங்கி சப்ளை செய்ய துப்புரவு ஆய்வாளரால் 18.04.2022 குறிப்பில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து துப்புரவு ஆய்வாளரின் பரிந்துரையினை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து உள்ளூர் மற்றும் வெளியூர் தனியார் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரிடவும் அதற்கான தோராய செலவினம் **ரூ.8.00/– இலட்சத்திற்கு** வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.74** **நாள்.02.06.2022**

**தீர்மானம் :அனுமதிக்கப்படுகிறது.**

---

**பொருள் எண்.15**

திருவேற்காடு நகராட்சி 18 வார்டுகளை உள்ளடக்கிய சென்னையை ஒட்டி அமைந்துள்ள தேர்வு நிலை நகராட்சியாகும் மொத்தம் 22,291 வீடுகள், 2011-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு உள்ளன. தற்போது தோராயமாக 26000 வீடுகள் என்ற எண்ணிகை அளவில் உள்ளது. தினசரி

இந்நகராட்சியில், 26 மெட்ரிக் டன் குப்பைகள் உருவாகிறது. இதில் 50% ஈரக்கழிவுகள் MCC-க்கும், 50% உலர் கழிவுகள் மறுசுழற்சிக்கும் அனுப்பப்படுகிறது. முதல் நிலை சேகரிப்பாக வீடுகள் தோறும் சென்று திடக்கழிவுகளை பிரித்து வாங்கும் பணிக்கு Battery Operated வாகனம் மற்றும் **Tricycle** பயன்படுத்தப்படுகிறது. இந்நிலையில் மேற்படி 40 BOV-க்கள், வாங்கப்பட்டதில் தற்சமயம் 26 மட்டும் நன்முறையில் இயங்கி கொண்டுள்ளன. மீதமுள்ள 14-BOV-க்களில் அடிக்கடி பழுது ஏற்பட்டுக் கொண்டே உள்ளது. பழுதுகள் அவ்வபோது சரிபார்க்கபடுகின்றன.அதே போன்று 55 டிரைசைக்கிள்கள் வாங்கப்பட்டதில், தற்போது 30 டிரைசைக்கிள்கள் மட்டுமே உபயோகத்தில் உள்ளது. பல வருடங்களுக்கு முன்னரே வாங்கப்பட்டமையால் படிப்படியாக பழுதுகள் அடைந்து, இயங்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையிலான டிரைசைக்கிள்கள் மட்டுமே பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இப்பணியினை திறம்பட செய்திட BOV-க்கள் மற்றும் டிரைசைக்கிள்கள் தேவை. எனவே பணியின் அவசர அவசியம் கருதி **15 டிரைசைக்கிள்கள்** வாங்கி வழங்கிட துப்புரவு ஆய்வாளரால் 12.05.2022 குறிப்பில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை ஏற்று ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து **15 டிரைசைக்கிள்கள்** வாங்கிட உள்ளுர் மற்றும் வெளியூர் தனியார் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரிட அதற்கான தோராய செலவினம் **ரூ.9.90/— இலட்சத்திற்கு** பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.75** **நாள்.02.06.2022**

**தீர்மானம் :அனுமதிக்கப்படுகிறது.**

---

**பொருள் எண்.16**

திருவேற்காடு நகராட்சி 18 வார்டுகளை உள்ளடக்கிய சென்னையை ஒட்டி அமைந்துள்ள தேர்வு நிலை நகராட்சியாகும் மொத்தம் 22,291 வீடுகள், 2011-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு உள்ளன. தற்போது தோராயமாக 30000 வீடுகள் என்ற எண்ணிகை அளவில் உள்ளது. தினசரி இந்நகராட்சியில், 26 மெட்ரிக் டன் குப்பைகள் உருவாகிறது. இதில் 50% ஈரக்கழிவுகள் MCC-க்கும், 50% உலர் கழிவுகள் மறுசுழற்சிக்கும் அனுப்பப்படுகிறது. நகராட்சியில் தற்போது 272 துப்புரவு பணியாளர்கள் பணிபுரிகின்றனர். முதல் நிலை சேகரிப்பாக வீடுகள் தோறும் சென்று திடக்கழிவுகளை பிரித்து வாங்கும் பணிக்கு Battery Operated வாகனம் பயன்படுத்தப்படுகிறது. இந்நிலையில் மேற்படி 40 BOV-க்கள், வாங்கப்பட்டதில் தற்சமயம் 26 மட்டும் நன்முறையில் இயங்கி கொண்டுள்ளன. மீதமுள்ள 14-BOV-க்களில் அடிக்கடி பழுது ஏற்பட்டுக் கொண்டே உள்ளது. முதல்நிலை சேகரிப்பு மற்றும் திடக்கழிவுகளை பிரித்து வாங்கும் முறைமைக்கு Battery Operated Vehicle-களின் பங்கு அவசியமானதாகும் சேஸ், சக்கரம், டயர், ஆக்ஸிஸ், பிரேக் மற்றும் உதிரிபாகங்களில் ஏற்படும் பழுதுகள் அவ்வபோது சரி செய்ய துப்புரவு ஆய்வாளரால் 10.05.2022 குறிப்பில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை ஏற்று ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து பணியின் அவசர அவசியம் கருதி பொது சுகாதார தேவையினை முன்னிட்டு அடிக்கடி பழுது ஏற்பட்டு வரும் **14 BOV-க்களின் பழுதுகளை சரி செய்திட** உள்ளுர் மற்றும் வெளியூர் தனியார் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரிட அதற்கான தோராய செலவினம் **ரூ.8.00/— இலட்சத்திற்கு** பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.76** **நாள்.02.06.2022**

**தீர்மானம் :அனுமதிக்கப்படுகிறது.**

---

**பொருள் எண்.17**

திருவேற்காடு நகராட்சி 18 வார்டுகளை உள்ளடக்கிய சென்னையை ஒட்டி அமைந்துள்ள தேர்வு நிலை நகராட்சியாகும் மொத்தம் 22,291 வீடுகள், 2011-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு உள்ளன. தற்போது தோராயமாக 30000 வீடுகள் என்ற எண்ணிகை அளவில் உள்ளது. தற்போது தமிழ்நாடு அரசு பதவி ஏற்று 1 வருட காலம் முடிவடைய உள்ளதை முன்னிட்டு 200 மரக்கன்றுகளை அடர்வனகாடுகள் வளர்ப்பு திட்டத்தின் கீழ் நடுவதற்கு தமிழக அரசாங்கம் தெரிவித்துள்ளது. இதன்பேரில் நகராட்சிய்ல உள்ள சுடுகாட்டுப் பகுதிகள், விளையாட்டு மைதானங்கள் உள்ள பகுதிகளில் மரக்கன்றுகள் நடப்பட உள்ளது. இதற்கு தேவையான **200 மரக்கன்றுகளை வாங்கிடவும், தகுந்த அடங்களில் குழி தோண்டப்பட்டு, மரக்கன்றுகளை ஊன்றிடவும்,** இந்த நிகழ்விற்கு ஏதேனும் ஒரு முக்கிய பிரமுகரை அழைத்திடவும் தேவையான ஏற்பாடுகளை செய்திட துப்புரவு ஆய்வாளரால் 04.05.2022 குறிப்பில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து துப்புரவு ஆய்வாளரின் பரிந்துரையினை ஏற்று 200 மரக்கன்றுகளை வாங்கி மேற்கண்ட நிகழ்ச்சிகளை மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து உள்ளூர் மற்றும் வெளியூர் தனியார் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரிடவும் அதற்கான தோராய செலவினம் **ரூ. 2.00/– இலட்சத்திற்கு** வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.77** **நாள்.02.06.2022**

**தீர்மானம் :அனுமதிக்கப்படுகிறது.**

---

**பொருள் எண்.18**

திருவேற்காடு நகராட்சி மொத்த 18 வார்டுகளோடு 1281 தெருக்கள் கொண்ட தேர்வுநிலை நகராட்சியாகும். இங்கு ஏறத்தாழ 1 லட்ச மக்கள் வசிக்கின்றன. மொத்தம் 18 வார்டுகள் இங்கு உள்ளன. நகராட்சியில் மழைநீர் கால்வாய்கள் 39.041Km நீளத்தில் அமைந்துள்ளன. மழைநீர் கால்வாய்களை தொடர்ந்து தூர்வாரி கொண்டு வருவது அவசியமாகும். ஒருமுறை தூர்வார ஆரம்பித்து அனைத்து வார்டுகளையும் தூர் வாரி முடிக்க குறைந்தபட்சம் 1 மாத கால அளவு ஆகும். அதன் பிறகு மீண்டும் தூர்வாருவது அவசியமாகும் இல்லாவிடில் மழைக்காலத்தில் மழைநீர்க் கால்வாயில் செல்ல வேண்டிய நீர் அருகில் உள்ள வீடுகளுக்கு செல்ல துவங்கும் நிறைய நிகழ்வுகளில் கழிவுநீரும் கலந்து செல்வது பொது சுகாதார பிரச்சனைகள் ஏற்படும். ஏனவே குறைந்தபட்சம் தினசரி **30 பணியாளர்கள் மழைநீர் கால்வாய் தூர்வார** தேவைப்படுவதால் மேற்படி பணி செய்திட துப்புரவு ஆய்வாளரால் 09.05.2022 குறிப்பில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து துப்புரவு ஆய்வாளரின் பரிந்துரையினை ஏற்று பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து உள்ளூர் மற்றும் வெளியூர் தனியார் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரிடவும் அதற்கான தோராய செலவினம் **ரூ. 9.90 /– இலட்சத்திற்கு** வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.78** **நாள்.02.06.2022**

**தீர்மானம் :அனுமதிக்கப்படுகிறது.**

---

**பொருள் எண்.19**

திருவேற்காடு நகராட்சியில் கொரோனா வைரஸ் மற்றும் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரப்படுகிறது. இந்நகராட்சி சென்னை பெரு மாநகராட்சியை ஒட்டி அமைந்துள்ளதாலும் மற்றும் புகழ்பெற்ற அருள்மிகு ஸ்ரீ தேவி கருமாரியம்மன் திருக்கோவில் அமைந்துள்ளதாலும் அதிக அளவில் சென்னை மற்றும் வெளியூர்களிலிருந்து பொது மக்கள் வந்து செல்கின்றனர். இதனால் பொது சுகாதாரம் பேணுவது அவசியமாகும். எனவே கொரோனா வைரஸ் நோய் தொற்று பரவாமல் தடுத்திட கிருமி நாசினி தற்போது இருப்பு இல்லாததால், துப்புரவு ஆய்வாளரின் **13.05.2022** தேதிய குறிப்பின் பரிந்துரையினை ஏற்று **325 லிட்டர் லெமன் கிராஸ் ஆயில்** கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரிட கால தாமதம் ஆகும் என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் மற்றும் வெளியூர் தனியார் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து அதற்கான தோராய செலவினம் **ரூ.9.90/—** இலட்சத்திற்கு வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.79** **நாள்.02.06.2022**

**தீர்மானம் :அனுமதிக்கப்படுகிறது.**

---

**பொருள் எண்.20**

திருவேற்காடு நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் தினசரி சேகரிக்கப்படும் குப்பைகளிலிருந்து மக்கும் மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து கோலடி பகுதியில் உள்ள உரக்கிடங்கில் சேமித்து வைக்கப்படுகிறது. மக்கும் குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்கவும், மக்காத கழிவுகளிலிருந்து துர்நாற்றம் வீசாமல் இருக்கவும் மற்றும் அக்கழிவுகளிலிருந்து ஈக்கள் மற்றும் கொசுக்கள் அதிகளவில் பரவாமல் தடுக்க அக்குப்பைகளின் மீது **EM Solution** தெளிக்க துப்புரவு ஆய்வாளரால் **13.05.2022** தேதிய குறிப்பில் பரிந்துரை செய்யப்பட்டதை தொடர்ந்து **700 லி EM Solution** கொள்முதல் செய்திட ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள காலதாமதம் ஆகும் என்பதாலும் தற்போது தமிழ்நாடு தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் மற்றும் வெளியூர் தனியார் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து விலைப்புள்ளி கோரிடவும் மற்றும் அதற்கான தோராய செலவினம் **ரூ.9.95/—** இலட்சத்திற்கு வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.80** **நாள்.02.06.2022**

**தீர்மானம் :அனுமதிக்கப்படுகிறது.**

---

**பொருள் எண்.21**

திருவேற்காடு நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் தினசரி சேகரிக்கப்படும் குப்பைகளிலிருந்து மக்கும் மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து கோலடி பகுதியில் உள்ள உரக்கிடங்கில் சேமித்து வைக்கப்படுகிறது. மக்கும் குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்கவும், மக்காத கழிவுகளிலிருந்து துர்நாற்றம் வீசாமல் இருக்கவும் மற்றும் அக்கழிவுகளிலிருந்து ஈக்கள் மற்றும் கொசுக்கள் அதிகளவில் பரவாமல் தடுக்க அக்குப்பைகளின் மீது **EM Solution** தெளிக்க துப்புரவு ஆய்வாளரால் **30.04.2022** தேதிய குறிப்பில் பரிந்துரை செய்யப்பட்டதை தொடர்ந்து **700 லி EM Solution** கொள்முதல் செய்திட ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள காலதாமதம் ஆகும் என்பதாலும் தற்போது தமிழ்நாடு தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் மற்றும் வெளியூர் தனியார் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து விலைப்புள்ளி கோரிடவும் மற்றும் அதற்கான தோராய செலவினம் **ரூ.9.95/–** இலட்சத்திற்கு வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.81** **நாள்.02.06.2022**

**தீர்மானம் :அனுமதிக்கப்படுகிறது.**

---

**பொருள் எண்.22**

திருவேற்காடு நகராட்சி பகுதியில் தினசரி 25 மெட்ரிக் டன் அளவிளான திடக்கழிவுகள் சேகரம் ஆகிறது. இவற்றுள் மக்கும் கழிவுகள் மற்றும் மக்காத கழிவுகள் சம அளவில் உள்ளன.மக்கும் கழிவுகள் MCC கொண்டு செல்லப்படுகிறது. மக்காத கழிவுகளை மறுசுழற்சிக்காக நாவலூர், மாதவரம் போன்ற இடங்களில் உள்ள மறுசுழற்சி மையங்களுக்கு எடுத்து செல்லப்படுகின்றன. தினசரி 20 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் முறைமை செய்யப்படுகிறது. எஞ்சியுள்ள 4 முதல் 5 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் தினசரி பிரிக்ககடாமல் உள்ளன. இதனால் கோலடி வளாகத்தில் சேகரிக்கப்பட்டுள் ஏறத்தாழ 150 முதல் 200 மெட்ரிக் டன் அளவிளான திடக்கழிவுகள் மற்றும் தாவரக்கழிவுகளை அப்புறப்படுத்திட துப்புரவு ஆய்வாளர் அவர்களின்18.04.2022 தேதிய குறிப்பில் பரிந்துரைக்கப்பட்டதை ஏற்று இத்திடக்கழிவுகளை Redhills பகுதியில் அமைந்துள்ள அகல்யா வேஸ்ட் மார்ட் என்ற தனியார் நிறவனத்திற்கு கொண்டு சென்று அப்புறப்படுத்திட பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் மற்றும் வெளியூர் தனியார் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரிடவும் அதற்கான தோராய செலவினம் **ரூ.9.90/– இலட்சத்திற்கு** வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.82** **நாள்.02.06.2022**

**தீர்மானம் :அனுமதிக்கப்படுகிறது.**

---

**பொருள் எண்.23**

இந்நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார பிரிவில், பொது சுகாதார பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு வருடாந்திர காப்பீட்டுக் கட்டணம் 2022–2023 ஆண்டுக்கு செலுத்த வேண்டியுள்ளதால் ஒரு வருட காலத்திற்கு காப்பீடு தொகை **69,511/–** கீழ்க்குறிப்பிட்டுள்ள

வாகனங்களுக்கு ஆயுள் காப்பீடு கட்டணம் **The New India Assurance Company Limited** நிறுவனத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**வாகனங்களின் விவரம்:–**

| S.No | Vehicle No | Gross Premium |
|---|---|---|
| 1. | TN -12 V - 7786 (Eicher ) | 40,619 |
| 2. | TN -12 AE- 2241(Bobcat ) | 28,892 |
| Total | | 69,511 |

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

## பொருள் எண்.24

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வீரராகவபுரம் கிராமம், ச.எண்.12, 1 ஏக்கர் 12 செண்ட் உள்ள களம் புறம்போக்கு எனும் வகைப்பாடு கொண்ட இடத்தில் இளைஞர்கள் விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டி மேற்கண்ட இடத்தினை திருவேற்காடு நகராட்சிக்கு நில உரிமை மாற்றம் செய்திட வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) வீரராகவபுரம் பகுதி மக்களின் தேவையை கருத்தில் கொண்டு ச. எண்.12, 1 ஏக்கர் 12 சென்ட் களம் புறம்போக்கு நிலத்தினை திருவேற்காடு நகராட்சிக்கு நில உரிமை மாற்றம் செய்திட திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை கேட்டுக்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மான எண்.83 நாள்.02.06.2022**

**தீர்மானம் :அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.25

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வீரராகவபுரம் கிராமம், ச.எண்.24, 1 ஏக்கர் 44 செண்ட் உள்ள கசம் புறம்போக்கு எனும் வகைப்பாடு கொண்ட இடத்தில் சமுதாயகூடம் அமைக்க வேண்டி மேற்கண்ட இடத்தினை திருவேற்காடு நகராட்சிக்கு நில உரிமை மாற்றம் செய்திட வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) வீரராகவபுரம் பகுதி மக்களின் தேவையை கருத்தில் கொண்டு ச. எண்.24, 1 ஏக்கர் 44 சென்ட் கசம் புறம்போக்கு நிலத்தினை திருவேற்காடு நகராட்சிக்கு நில உரிமை மாற்றம் செய்திட திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை கேட்டுக்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மான எண்.84 நாள்.02.06.2022**

**தீர்மானம் :அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.26

திருவேற்காடு நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களின் அலுவலகத்திற்கு தேவையான கணிணி உபகரணங்கள் மற்றும் புதிய தொழில்நுட்பம் கொண்ட கணிணி கொள்முதல் செய்ய அரசு அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனத்தில் விலைப்புள்ளி கோரி வாங்குவதற்கு தோராய செலவீனம் ரூ.9.90 இலட்சத்திற்கு பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ)மன்றம் அனுமதி அளிக்கலாம்

**தீர்மான எண்.85 நாள்.02.06.2022**

**தீர்மானம் :அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.27**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவின் கீழ் இயங்கும் குடிநீர் வாகனம் எண்.TN 20 AJ 7477 என்ற வாகனத்திற்கு வருடாந்திர காப்பீடு (Insurance) **07.06.2022** அன்றுடன் முடிவு பெறுவதால் **08.06.2022** முதல் **07.06.2023** வரையிலான ஒரு வருட காலத்திற்கு மேற்படி வாகனத்திற்கு காப்பீடு புதுப்பித்தல் செய்திட வேண்டி, அதற்கான கட்டணம் The New India Assurance Company Ltd., நிறுவனத்தாரின் புதுப்பித்தல் அறிவிப்பு கடிதம் படி காப்பீடு தொகை ரூ.**40,119/–** என பெறப்பட்டடுள்ளது. எனவே, மேற்படி நிறுவனத்திற்கு காப்பீடு தொகையினை பொது நிதியிலிருந்து காசோலையாக செலுத்திட மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம்அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து தொகை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.86 நாள்.02.06.2022**

**தீர்மானம் :அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.28**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுநிதியின் கீழ் **15**வது நிதி குழு ஆணையரகத்தின் மான்யம் **2020–21** (Tied Grand) மற்றும் **2021–22** (Un-Tied Grant) நிதியின் கீழ் அடிப்படை வசதி பணியான தார்சாலை அமைத்தல் மற்றும் மயான பகுதிகளுக்கு சுற்றுச்சுவர் அமைக்கும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு கடிதத்தினை அரசின் செய்தி மற்றும் விளம்பரத் துறை மூலம் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்ததற்குண்டான பட்டியல் M/s.Sudha Ads, No.51&52, 25(2/47), Real Towers, Thiru.Ve.Ka High Road, Mylapore, Chennai-600005. என்ற நிறுவனத்திடமிருந்து கீழ்க்கண்டவாறு பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்கண்ட நிறுவனத்திற்கு தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1292/2022/இ1)

| வ. எண் | விளம்பர செய்த நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விளம்பரம் மேற்கொண்டதற்கான பணி விபரம் | பட்டியல் எண். மற்றும் தேதி | பட்டியல் தொகை(ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | M/s.Sudha Ads, No.51&52, 25(2/47), Real Towers, Thiru.Ve.Ka High Road, Mylapore, Chennai-600005. | 15வது நிதி குழு ஆணையரகத்தின் மான்யம் 2020–21 (Tied Grand) மற்றும் 2021–22 (Un-Tied Grant) நிதியின் கீழ் அடிப்படை வசதி பணியான தார்சாலை அமைத்தல் மற்றும் மயான பகுதிகளுக்கு சுற்றுச்சுவர் அமைக்கும் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு | SA7444<br>25–03–2022 | 28,929.00 |
| | | | **மொத்தம்** | **28,929.00** |

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம்அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.87 நாள்.02.06.2022**

**தீர்மானம் :அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.29**

திருவேற்காடு நகராட்சி மற்றும் அதனை சுற்றியுள்ள 8 கிராம பஞ்சாயத்துகளான, சென்னீர்குப்பம், அயப்பாக்கம், அடையாளம்பட்டு, கோலப்பன்சேரி, பிடாரி தாங்கல், பானவேடு தோட்டம், பாரிவாக்கம் மற்றும் வரதராஜபுரம் பகுதிகளை ஒருங்கிணைந்து பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துவது குறித்து தயாரிக்கப்பட்டுள்ள திட்ட அறிக்கை சம்மந்தமான விளக்க கூட்டம் 28.04.2022 அன்று காலை 10.30 மணியளவில் சென்னை–95, மதுரவாயலில் உள்ள **"நம்ம வீடு வசந்த பவனில்"** உள்ள கூட்ட அரங்கில் (டாக்டர்.எம்.ஜி.ஆர் பல்கலைகழகம் எதிரில்) நடைபெற்றது. மேற்படி கூட்ட அரங்கில் கூட்டம் நடத்த ஏதுவாக LED Screen மற்றும் புகைப்படம் நகல் M/s.M.R Stills, Digital Studio, (Prop.Mr.M.R.Rameshkumar) எண்.6எ, ஆரவாமுதன் தெரு, பராசக்தி நகர், திருவேற்காடு, சென்னை–77 என்ற நிறுவனத்தார் மூலம் மேற்கொள்ளப்பட்டதால், அதற்கான பட்டியல் தொகை ரூ.23,500/–ஐ வழங்கிட கோரி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

1. மன்றம்அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.88 நாள்.02.06.2022**

**தீர்மானம் :அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.30

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2021–22ன் கீழ் கீழ்க்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள 12.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | சக்ரீஸ்வரர் நகர், எல்.கே.பி நகர், அரவிந்த நகர் மற்றும் சக்தி நகர் ஆகிய பகுதிகளில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 9.90 | 1.திரு .G.விஜயகுமார்<br>2.M/s.குமரேசன் கான்ட்ராக்டர் | 0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.05 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | கஸ்தூரிபாய் அவென்யூ, TTS நகர் மற்றும் சக்தி நகர் ஆகிய பகுதிகளில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 8.00 | 1.திரு .G.விஜயகுமார்<br>2.M/s.குமரேசன் கான்ட்ராக்டர் | 0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.05 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 3. | அன்பு நகர், திருவேங்கடம் நகர் (ம) அண்ணா நகர் பகுதிகளில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 8.10 | 1.M/s.குமரேசன் கான்ட்ராக்டர்<br>2.திரு .G.விஜயகுமார் | 0.15 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.95 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 4. | எட்டீஸ்வரன் கோயில் தெரு, பச்சையப்பன் நகர், நியூ சென்சூரியன் நகர் மற்றும் தினேஷ் நகர் பகுதிகளுக்கு ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 9.90 | 1.M/s.குமரேசன் கான்ட்ராக்டர்<br>1.திரு .G.விஜயகுமார் | 0.15 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.95 % மதிப்பீட்டை விட அதிகம் |

